சிவமயம்

Registered as a News-paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம்:—தாரணஹ கார்த்திகைமீ ரகூஉ (1944 டிசம்பர்மீ 4 திங்கட்கிழமை) [இல சுகூ

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வரலாறு

## யோகி சுத்தானந்த பாரதியார் எழுதிய நூல்

(க. இராமச்சந்திரன்)

சென்றஆண்டு கொழும்பு விவேகானந்தசபை ஆதரவில் நடந்த நாவலர் குருபூசையன்று, அவரின் சரித்திரத்தை யோகி சுத்தானந்தர் நவீனமுறையில் விரிவாக எழுதப்போகும் செய்தி தெரியவந்தது. அதைத் தொடர்ந்து இலங்கையில் வெளியாகும் பல தமிழ்ப் பத்திரிகைகளில் அச்செய்தி வெளியானது. சுவாமி சுத்தானந்தபாரதியார் புதுவையில் தனிமோனதவத்தில் அமர்ந்த காலந்தொட்டு அவரது உள்ளத்தில் உதித்த கோரிக்கைகள் பல; அவற்றுள் நாவலர் பெருமானின் வரலாற்றைக் காலத்துக்கேற்ற முறையில் அழகாய் வரைந்து தமிழுலகுக்களிக்கவேண்டுமென்றதும் ஒன்றாகும்; பராசக்தியின் திருவருளால் அவரது கோரிக்கைகள் செவ்வனே நிறைவேறிக்கொண்டு வருகின்றன; நாவலர் வரலாறும் ஆறுமாசங்கட்கு முன் முடிவாகி, கையெழுத்துப் பிரதியிலிருந்தும் (type) வெளியாய்விட்டது. ஆனால் காகிதப்பஞ்சமும் காகிதக் கட்டுப்பாட்டுச் சட்டமுங் காரணமாக, யாம் எல்லோமும் ஆவலுடன் எதிர்பார்த்தபடி இந்த ஆண்டுக் குருபூசைத் தொடர்ச்சியில், அந்நூல் அச்சேறிவெளிவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலாவது அச்சிட உத்தரவு கிடைக்குமென அன்பு நிலையத்தார் நம்புகின்றனர். எனவே, அதினின்றும் சில பாகங்களையாயினும், வருகிற புதன்கிழமை நடக்கப்போகும் நாவலர் குருபூசையை முன்னிட்டு இந்துசாதன வாசகர்கட்கு இக்கட்டுரை மூலம் அறியச்செய்தல் ஓர் சிவத்தொண்டாகலாமெனக் கருதுகின்றோம். அது வருமாறு:—

“பல நூல்களை ஆராய்ந்து, நிகழ்ச்சிகளை நிரல்படவைத்து இந்நூலை எழுதித் தமிழருக்களிக்கிறேன். இந்நூலைத் தமிழர் அனைவரும் படிக்கவேண்டுமென்பது அடியேன் வேண்டுகோள். இதில்விளக்கியுள்ள சைவநெறி மனித மரபுக்கெல்லாம் இன்பநெறியாகும். இறைவன் அருளால் வந்த குருமாரெல்லாம் என் வணக்கத்திற்குரியவர்களே. உண்மையான சைவத்தை விரும்புவதுபோலவே, நான் உண்மையான கிறிஸ்துவத்தையும் இஸ்லாமையும் விரும்புகிறேன். உண்மைக்கு மாறானதை எவரும் ஏற்கமுடியாது நாவலர் உண்மையைப் ‘பச்சையாக’ப் பேசிய உத்தமர். ஆதலால் அவர் உள்ளத்தில் மாசற்ற அன்பை உலகம் சமரஸ நோக்கத்துடன் உணர்ந்து பயன் பெறுக. சின்னஞ் சிறுவர்முதல் மாபெரும் புலவர் வரையிற் படிப்படியாகப் படிக்க நாவலர் இலக்கியப்பணி செய்துவைத்திருக்கிறார். சுந்தரர் தம்மை அடியார்க்கும் அடியேன் என்றார், நாவலர் சிறந்த சிவநேசச் செல்வர்; என்னை யாளுடைய தில்லையப்பனுக்குத் திருவுடை அன்பர். அவர் வரலாற்றை எழுதுவதே ஒரு பதி புண்ணியம். அப்பேற்றை எனக்கு அளித்த சிவபெருமானை வணங்குகிறேன். ஓம் நம சிவாய” என்று தமது நன்றியைக் கூறி அடிகள் ஆரம்பிக்கிறார் நாவலர் சரிதையை. பொதுவாக ஒவ்வொரு யாழ்ப்பாணத் தமிழனும் சிறப்பாகச் சைவ சமயிகள் சகலரும் அளப்பரும் பெருமை கொள்ளக்கூடிய முறையில் இப்புதுநூல் அமைந்துள்ளது. நமக்கும் நாவலர் பெருமானுக்கும் இடையேயுள்ள அறுபத்தைந்து ஆண்டுகளாகுங் காலத்திரையைநீக்கி, அவரைநம்முன்நிறுத்தி, அவரது வீரகர்ச்சனையை நாம் நேரிற் கேட்பதுபோன்ற ஓர் அற்புத முறையில், சுவாமி சுத்தானந்தர் இந்த நூலை அமைத்திருப்பதை அவதானிக்கும்போது, இதுவரையில் நாவலரின் புகழுடம்பை மாத்திரம் கண்டோர்க்கு அவரின் பூத உடலையுங் காண்பதுபோன்ற உள்ளக்கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் உதிக்குமென்பதில் ஐயமில்லை.

### ஐந்தாங் குரவர்

இத் தலையங்கத்துடன் ஆரம்பிக்கும் முதலாம் அத்தியாயத்தில்

அவர் வேதத்தையும் ஆதரித்தார்; ஆகமத்தையும் போற்றினர். அரு, உரு, குரு ஆகிய மூன்று தெய்வ விளக்கத்தையும் மதித்தார் சிவாகமத்திற்கு மாறானதைக் கண்டித்தார்; முதன்மையாக அக்காலம் படர்ந்துவந்த போலிக் கிறிஸ்தவத்தையே அவர் தக்க ஆதாரங்காட்டி மறுத்தார். அவர் காட்டும் ஆதாரங்களை எதிரிகளும் மறுக்கமுடியாது. நாவலர் பேச்சளவில் நிற்கவில்லை, செயலிலும் முனைந்தார். ஏராளமான கருவி நூல்களையும் சமய நூல்களையும் தாமே அச்சகம் நாட்டி வெளியிட்டார். பல பாடசாலைகளைக் கண்டு மாணவருக்குக் கல்வியளித்தார். நமது சமயத்தையும் புராணங்களையும் தூற்றிக் கேலி செய்தவர் வாயை அடக்கினார், பிறர் அஞ்ஞானிகள், சாம்பலாண்டிகள், பேயை வணங்குவோர், கல்லைக் கட்டியழுவோர் என்று ‘வெளுத்துவாங்கிய’ பாதிரிமாருக்குச் சரியான பாடங் கற்பித்தார். அந்நியமோகத்தாற் பிறமதம் புகுந்த நம்மவரைச் சிவநெறி தழுவச் செய்தார். தயானந்தர் சுத்தி சங்கடன் இயக்கந் தொடங்குமுன்பே, நாவலர் இங்கே சைவ சமாஜங் கட்டி நம்மவரை ஒன்று சேர்த்தார். திருமுறை நூல்களுக்குப் புத்துயிர் தந்தார். வேதாகமச் சைவத்தின்பெருமையைமாந்தர்மனத்திற்பதியச்செய்தார். அவர்சொல்

## நாவலர் சிவபத்தி யுறைப்பு

“அக்காலத்தில் இவருடைய கையிற் பணமில்லாமையாற் பிடியரிசி தண்டிச் சேர்க்கும் பொருள்கொடுத்து, தம்மிடத்தே முன்கற்ற சதாசிவப்பிள்ளை முதலானவர்களை உபாத்தியாயர்களாக நியமித்து, ஒருவாறு அதனை நடத்தி வந்தார்; இப்படிப்பட்டசமயத்திலே, ஒரு வர்த்தகசாலை விலைக்கு வாங்கத் தக்கதாக வந்தது அதனை வித்தியாசாலைக்காக வாங்க விரும்பியும் போதிய பணம் கையிலில்லாமையால் மனம் வருந்திக்கொண்டிருக்குங் காலத்தில், ஒருநாள் பூசையிலே தமது உடையவரை நோக்கி அழுது ஒரு செய்யுள் சொன்னார்; அச் செய்யுள் இது:

“மணிகொண்ட கடல்புடைகோ
ளிந்நாட்டில்
உன்சமய வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்கு
வான் கருதியெம்
மெய்ப்பொருட் பேறெழித்தே,
கணிகொண்ட வித்தியாசாலைதா
பித்திவ்வூர்க்
கயவர்செயு மிடர்கள்கண்டுங்,
கல்லூரியதைநடாத் தப்பொருட்
டுணைசெயக் கருதுவோ
ரின்மை கண்டும், அணிகொண்ட
சாலைய தொழிப்பினஃ
துனையிகழ
மந்நிய மதத்தர் சாலையா மென,
நினைந்தெனெஞ் சற்பகற்றுயருறல்
அறிந்துமொரு சிறிதுமருளாத்,
திணிகொண்ட நெஞ்சவினி நின்
முன்யானுயிர் விடுதல்
திண்ணநீ யறியாததோ,
சிறியேனதன்பிலர்ச் சனைகோள்
அழகியதிருச்சிற்றம்பலத் தெந்தையே.”

கொழும்பிலுள்ள பிரபுக்களுள்ளே ஔதாரிய குணத்திற் சிறப்புற்றோங்கிய இ: நன்னித்தம்பி முதலியார் என்பவர் இவ்வித்தியாசாலைக்காக ச00 ரூபா அனுப்பியிருந்தார். அந்தப்பணம் உடையவரை நோக்கி அழுது புலம்பின அன்றே வந்து சேர்ந்தது; அப்பணத்தை மூலமாக வைத்துக்கொண்டு அந்த வர்த்தகசாலையை வாங்கினார், தமது அவ் வித்தியாசாலையிற் படிப்பித்தற்காக நிகண்டு முதலிய கருவி நூல்களையும், தாம் எழுதிய பாலபாடங்களையும், சைவசமயசாரம், சிவாலய தரிசனவிதி முதலிய சமய நூல்களையும் அச்சிடுவித்தார்.

வீறுபடைத்த அருள்வாக்கி* நாவலர், அவருக்கு முன் ஒரு நாவலரில்லை; பின்னும் இல்லை. உலக மகான்களில் அவர் ஒருவர். அவர் ஊட்டிய உணர்ச்சி இன்றும் உள்ளத்திற்குள்ளம் சுழன்று பரவுகின்றது. அவர் காட்டியவழி இன்னுமின்னும் விசாலித்து வருகிறது. அவர் நாட்டிய நிலையங்கள் ஒன்று பலவாகி அரிய பதிபுண்ணியம் செய்து வருகின்றன. அவர் அடிச்சுவடுகள் இன்னும் அழியாதிருக்கின்றன. அவற்றைப் பின்பற்று

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

[* வாக்கி - நால்வகைப் புலவருள் ஒருவர். இவர் அறம் பொருளின்பம் வீடென்னும் நால்வகைப் பொருளைக் கேட்க விரித்துக் கூறுவோர், பா]

## ஃ நாவலர் திருநாள் வெளியீடு ஃ

“சென்ற நூற்றாண்டு பல பெரியாரைக் கண்டது; அவருள் சமயதீபமாக விளங்கியோர் இருவர் வடக்கே தயானந்தர் (1824—1883) தெற்கே நாவலர் (1822—1879) இருவரும் வந்திராவிடில் வேதாகமங்கள் வேருடன் மறைந்திருக்கும்; தயானந்தர் தூயவேத நெறியை விளக்கினார்; நாவலர் தூய சைவநெறியைத் துலக்கினார், இருவரும் பிரமசாரிகள், ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; காலத்தையும் ஞாலத்தையும் அறிந்து சிறந்தவர்கள்; உரமான பேச்சாளர்; அஞ்சா நெஞ்சுரங்கொண்டு போலியொழுக்கங்களை உள்ளும் புறமுங் கண்டித்தவர்கள், தயானந்தர் சத்யார்த்தப்பிரகாசம் எழுதினார்; வேதத்திற்கு முன்னுரை தீட்டினார்; அவ்வளவே; நாவலரோ அரிய, பெரிய பலநூல்களை யாத்தளித்தார்; வேதவியாசர் போலப் பழஞ் செல்வங்களைத் தொகுத்தளித்தார்; தயானந்தர் வேதக்கலை பரவ ஆரிய சமாஜங் கண்டார். வேதம் தவிர மற்றெல்லாச் சமயங்களையுங் கண்டனஞ்செய்து தாக்கினார்; கோயில், உருத்தொழுகை, புராணம், ஆகமம் இவற்றையும் முழுமூச்சாகத் தாக்கிச் சத்தியார்த்தப் பிரகாசம் எழுதினார்.”

“ஆறுமுக நாவலர் ... புண்ணியம் ... பெற்றதுதும்

வலிமையே பலரைச் சைவராக்கியது.”

“நாவலர் தமிழுக்கும், தமிழருக்கும், தமிழகத்திற்கும் செய்த தொண்டு அளப்பரிது. இனிய உரைநடை வகுத்த புலவர் அவரே. அவர் உள்ளம் தமிழ் சைவம் என்றே துடித்தது. அவர் பணத்தை மதிக்கவில்லை, செல்வச்செருக்கைக் கெஞ்சவில்லை பட்டம் பதவிகளை வேண்டவில்லை. அவர் தலைநிமிர்ந்து நடந்தார். சிவத்தையே மதித்தார். உண்மையை உண்மையென்றார். பொய்யைப் பொய்யென்றார். தமிழின் பெருமையை நாட்டினார் சைவத்தின் பெருமையை நடந்து காட்டினார். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் வந்திராவிட்டாற் சைவ சமயமே மறைந்திருக்கும். அவர்களுக்குப் பின்வந்து சைவசமயத்தைக் காத்தவர் நமது நாவலர்பெருமானே. ஆறுமுகநாவலர் என்பது போதாது; அவர் நாவன்மை படைத்தவர்மட்டுமல்லர். அவரை ஆறுமுகநாயனார் என்பதே தகும். முன்வந்த நான்கு சமயகுரவருக்குப் பிறகு இவரை ஐந்தாங்குரவர் என்பதே பொருந்தும். அக்காலம் ஓர் சர்வமதசங்கம் கூடியிருந்தால், சைவத்திற்குப் பிரதிநிதியாக நாவலரையே நாம் அனுப்பியிருப்போம். விவேகானந்தர் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஞு
கார்த்திகை சகூஉ திங்கட்கிழமை

## நாவலர் பெருமை நவிலுதற்கெளிதோ!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலவர்கள் திருநாள் வருகிற புதன்கிழமை (6-12-44) சைவத்தமிழ் நாட்டிற் பல இடங்களில் ஆர்வத்துடன் நடத்தப்படும்; வருடந்தோறும் இப்பெரியாரின் குருபூசை நிகழும்போது, இப்பெரியாரைப்பற்றிச் சபைகூட்டி அறிஞர்கள் பேசுவதும் பத்திரிகையாசிரியர்கள் பாராட்டி எழுதுவதும் வழக்கமாகும். இந்தப் பெரியாரைப்பற்றி எத்தனைபேர் எத்தனைமுறை தத்தம் அறிவுக்கு எட்டியவாறெல்லாம் பாராட்டிப் பேசினாலும் எழுதினாலும், இவருடைய பெருமையை யுள்ளபடி சொல்லுதல் முடியாதெனலாம்.

தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களுக்குத் தத்துவார்த்தஞ் சொல்லுவதும், திருக்குறள் ஔவைப்பிராட்டியார் திருவாக்கு என்னுமிவைகளின் நுண்பொருளை ஆராய்தலும், புராணத் தலையாக விளங்கும் கந்தபுராணத்தின் ஞானார்த்தத்தை உரைத்தலும் அவற்றின் பொருளை யாராய்வோரின் கல்வியறிவு மதிநுட்பம் தெய்வபக்தி யென்னுமிவைகளைப் பொருந்துள்ளனவென்று சொல்வதேயொழிய இதுதான் அசைவறாத நூல்களின் உண்மையான அர்த்தமென்று எவராலும் திடமாகச் சொல்லுதலும் எழுதுதலும் இயலாதென்பது அறிஞர்கள் கொள்கையாகும். இக்காரணத்தினாலன்றோ மேலே சொல்லப்பட்ட நூல்களை அருள்வாக்கென்று அறிஞர் கூறுவர். இதனை உதாரணமுகத்தால் விளக்குவோம். இந்த யாழ்ப்பாணத்திலேயுள்ள சைவமக்களெல்லாம் பாராட்டிப் பூசித்து வருகின்ற கோயில்களில் வருடந்தோறும் படனஞ் செய்யப்படுவதாகிய கந்தபுராணத்திற்குப் பலர் பொருள் சொல்லப் பல சமயங்களிற் கேட்டுள்ளோம்; இப்புராணத்தின் கதைப்போக்கும் பொதுக் கருத்தும் எவர் சொல்லும்போதும் ஒத்தனவாக விருப்பினும், இடங்களையும் தத்துவார்த்தத்தையும் சொல்லும்போது, பொருள் சொல்பவருடைய அறிவுக்குத் தக்க அளவிலே அவர்கள் சொல்லுவதுதான் பெருக்கின்றது; சாதாரண தமிழ் அறிவுடையோர் பொருள் சொல்லுதலும், தத்துவ சித்தாந்த நுண்பொருள் போன்றவர்கள் நுண்பொருள் தெரிப்பதற்குமிடையேயுள்ள பேதம் முறையே பூனைக்கும் யானைக்கும் இடையேயுள்ள பேதம் போற் காணத்தக்கதாயிருக்கிறது.

இதுபோலவே நாவலப்பெரியாரைப் பற்றிப் பேசும்போதும் எழுதுவோர் பேசுவோரின் திறமைக்குத்தக்க அளவிற்கு நாவலப் பெரியார்மாண்பு தெருட்டப்படுகின்றதேயொழிய அப்பெரியார் மாண்பை உள்ளபடி எடுத்துரைத்தல் இயலாதிருக்கின்றதெனலாம். நாவலப்பெரியாருடைய திருநாளின் பெயரால் வெளிவரும் இப்பத்திரிகையின் இற்றைப் பிரசுரத்தில், இப்பெரியாரைப்பற்றி திரு K. இராமச்சந்திரன் அவர்கள் எழுதியுதவிய விஷயத்தில், இம் மகானைப்பற்றிச் சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதிய வரலாற்றின் சில பாகங்களை எடுத்து அநுவதித்துக் காட்டியுள்ளார். நாவலரவர்களைப்பற்றி முன்னுள்ளவர்கள் பலர் எழுதியதைக் காட்டிலும் பாடியவற்றைக் காட்டிலும் பாரதியாரவர்களுடைய எழுத்து நாவலர் பெருமையை வெகு திட்பநுட்பமாகப் படிப்போருள்ளத்திற் பதியச் செய்கின்றது; உள்ளத்தையுருக்கிச் சைவத்திலும் செந்தமிழ்மீதும் ஆர்வம் பிறக்கச்செய்கின்றது. குறித்த நாவலர் வரலாற்று நூல் அச்சாகி வெளிவருந் தினமே சைவத்திற்கும் தமிழுக்கும் புத்துயிரளிக்கும் புண்ணிய தினமென்று எண்ணக் கிடக்கின்றது.

இவைகளை யுத்தேசித்தே நாவலப் பெரியார் பெருமை எவராலும் எடுத்துச் சொல்லவரியதென்கின்றோம். நாவலரவர்கள் ஞாபகார்த்தமாகவும், அவர்கள் குருபூசைத தினத்திலும் செய்யத்தக்கன இவைபிவை யென்பதை இற்றைப் பிரசுரத்தில் வெளிவந்துள்ள ஏனைய வியாசங்களிற் காணலாகும். நாவலர் செய்த செயற்கருஞ் செயல்களையொப்பத் தாமுஞ் செய்ய வேண்டுமென்று நோக்கங் கொண்டு செய்பவர்கள் இயன்றவரையில் அப்பெரியாரின் தூயவாழ்க்கையைப் பின்பற்றியொழுக முயலுதல் வேண்டும்; அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் என்னும் இந்நான்கு குற்றங்களையும் தம்மிடத்திலிருந்து அறவேயகற்றி, தம்மையே கருதுதல், புகழுக்கு ஆசைப்படுதல் முதலிய தீமைகளையும் ஒழித்துத் தூயசிந்தையுடையராய்த் தெய்வபக்தியைக் கடைப்பிடித்து இறைவனருளைத் துணையெனக் கொண்டு ஆர்வத்தோடும் அபிமானத்தோடும் கருமமாற்றுதல் வேண்டும். இப்படி ஆற்றும்போது எவ்வெவர் தடையும் ஏற்றுக்கொள்ளாது, அவமதிப்புங் கொள்ளாது கருமங் கண்ணாகச் செய்தல் வேண்டும். மேலும் நாவலப் பெரியாருடைய தூயவாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல்களை அச்சிட்டுக் குறைந்த விலைக்குப் பெறத்தக்கதாக்கிப் பள்ளிக்கூடமாணவரெவரும் இலகுவில் வாங்கிப் படிக்கச் செய்தல் வேண்டும். இவைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எடுத்துக் காட்டத்தக்கன.

—————

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் ஷை சபைநிலையத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் குருபூசை நிகழும் தாரண ஞு கார்த்திகை மீ உக (6-12-44) புதன்கிழமை நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

முற்பகல்

10—12 தேவார திருவாசக பாராயணம்.

பிற்பகல்

1—2 மாகேசுரபூசை.

இரவு இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கள் தலைமையில் நாவலரவர்கள் வாழ்க்கை சம்பந்தமான பிரசங்கங்கள் நடைபெறும்.

மாலை 6—7 தமிழ்மறையோதல்.

திரு. மு. சுப்பையா தேசிகர் அவர்கள்.

உபந்நியாசம்

1 நாவலரும் சைவமும்
பண்டிதர் திரு. கா. நமசிவாயம் அவர்கள்.

2 நாவலரும் தமிழும்
திரு. சி. நாகையா அவர்கள்.

3 நாவலர் வாழ்க்கை மாண்பு
திரு. வே. கந்தையா அவர்கள்.

என ஷை சபைக்காரியதரிசி தெரிவிக்கின்றார்.

# சிவ புண்ணியத்தின் பெருமை

நாவலரவர்கள் செய்த ஒரு பிரசங்கம்

"கனம்பொருந்திய சைவசமயப் பிரபுக்களே!

தங்கள் தங்கள் சமயம் இது எனவும் அதற்குரிய கடவுள் இவர் எனவும், அக்கடவுள் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக்கொண்டருளும் முறைமை இது எனவும், அவரை ஆன்மாக்கள் வழிபடும் முறைமை இது எனவும், அறிதலும் அறிந்தபடி அநுட்டித்தலும் எல்லாச் சமயத்தாருக்கும் கடனாகும். ஆதலினால், நம்முடைய சமயக் கிரமத்தை அறிதலும், அறிந்தபடி அநுட்டித்தலும், சைவசமயிகளாகிய நமக்குக் கடனாமே.

நாமெல்லாம் சைவர்கள். சைவர் என்னுஞ் சொற்குச் சிவனை வழிபடுவோர் என்பது பொருள். ஆகவே சிவனை வழிபடுவோர் யாவர் அவரெல்லாஞ் சைவரெனப்படுவர். சைவர் ஆதிசைவரும், மகாசைவரும், அநுசைவரும், அவாந்தர சைவரும், பிரவர சைவரும், அந்திய சைவரும்என ஆறு வகைப்படுவர். அவர்களுள்ளே ஆதிசைவராவார் அநாதிசைவராகிய சதாசிவ மூர்த்தியுடைய ஐந்து திருமுகங்களிலும் தீக்ஷிக்கப்பட்ட பஞ்சரிஷிகோத்திரத்துச் சிவப்பிராமணர். மகாசைவராவார் வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். அநுசைவராவார் க்ஷத்திரியருள்ளும் வைசியருள்ளும் சிவதீக்ஷை பெற்றவர். அவாந்தரசைவராவார் சூத்திரருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். பிரவரசைவராவார் அறுவகை யநுலோமருள்ளும் சிவதீக்ஷை பெற்றவர். ஒழிந்த சாதியாரெல்லாருள்ளும் சிவபெருமானை வழிபடுவோர் அந்திய சைவரெனப்படுவர். இதனாற் பிராமணர் முதற் புலையரீறாகிய எல்லாச் சாதியாரும் சிவபெருமானை வழிபடுதற்கு உரியர்களென்பது பெறப்பட்டது. ஆயினும் வழிபடற் கிரியைகள் வருணந்தோறும் சில வேறுபாடுடையனவாம்.

சிவபெருமான் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் இடமாகக் கொண்டுநின்றும், அகத்தே உயிர்இடமாகக் கொண்டுநின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். லிங் என்னும் தாதுசித்திரித்தல் எனப் பொருள்படுதலால், படைத்தல் காத்தல் முதலியவைகளினாலே உலகத்தைச் சித்திரிப்பதாகிய சிவத்தினுடைய பிரபாவமே இலிங்கமெனப்படும். அவ்விலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய வாணம் சைலம் முதலியவைகளும் உபசாரத்தினால் இலிங்கம் எனப்படும்.

இலிங்கம் ஆன்மார்த்தலிங்கம் எனவும் பரார்த்தலிங்கமெனவும் இரண்டு வகைப்படும். அவைகளுள் ஆன்மார்த்த லிங்கமாவது ஆசாரியரிடத்தே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு மரணபரியந்தம் தன்பொருட்டுப் பூசிக்கப்படும் இலிங்கமாம். இது இட்டலிங்கம் எனவும் பெயர்பெறும். பரார்த்த லிங்கமாவது பிறர் பொருட்டுச் சர்வசங்கார காலமளவும் பூசிக்கப்படும் இலிங்கமாம். அதுவே திருக்கோயிலுள்ளிருக்கும் இலிங்கம். அது சுயம்பு, காணம், தைவிகம், ஆரிடம், மானுடம் என ஐவகைப்படும். சிவலிங்கம் அசைவில்லாததாலினாலே தாவரம் எனப்படும்.

சைவசமயத்தை அடைந்தவர் சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்குரிய மார்க்கம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும். அவைகளுள்ளே, சரியையாவது புறத்தொழிலினாலே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டினாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. யோகமாவது அகத்தொழிலினாலே அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. ஞானமாவது புறத்தொழில் அகத்தொழில்என்னும் இரண்டுமில்லாமல் அறிவுத் தொழின் மாத்திரத்தினாலே அம்மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவனிடத்தே செய்யும் வழிபாடு. இந்த நான்கு மார்க்கத்தில் ஒழுகுவோர்களே மெய்யடியார்கள். இவ்வடியார் திருமேனி அசைவுடையதாதலாற் சங்கமம் எனப்படும்.

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் நிற்பினும், சிவலிங்க முதலிய திருமேனியும் மெய்யடியார் திருவேடமுமாகிய இவ்விரண்டிடத்து மாத்திரமே தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களி னெல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே, சைவசமயிகளாகியநாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை இலிங்கமும் சங்கமுமாகிய இவ்விரண்டிடத்தும் விதிப்படி சிரத்தையோடு வழிபடல் வேண்டும்.

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செயற்பாலதேயாம். மல நீங்கிய ஞானிகளும், பூர்வ மலவாசனை தாக்காமைப்பொருட்டும், சிவானந்தம்மேன்மேல்வளர்தற்பொருட்டும், சிவலிங்கமுதலிய திருமேனியையும், மெய்யடியார் திருவேடத்தையும் வழிபடல் வேண்டும் என்று சிவஞானபோத முதலிய ஞானநூல்களில் உணர்த்தப்பட்டது. நித்திரை செய்வோர் கையிற்பொருள் அவரறியாது தானே நீங்குதல்போலச் சிவஞானிகளுக்குச் சரியாதிகள் தாமே தவிர்வனவன்றி அவர் அவைகளைத் தவிர்ப்பாரல்லர். சரியாதிகளைத் தாமே விடுத்தவர் நரகத்து வீழ்வர்; இவ்வுண்மை உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த சங்கற்ப நிராகரண முதலிய உண்மை நூல்களினாலே துணியப்படும். —வரும்

## ஆறுமுகநாவல சற்குரு.

ஆறுமுக நாவல னெனுஞ்சபாப் பிரசங்க சிங்கமிங் கவதரித்த
தாருமறி வாரவன தறிவொழுக் கங்கல்வி யறிகிலார் யாதுமறியார்
தேறுமுக மொன்றிலேற் கறிவுசிறி தருள்செய்த தேசிகோத் தமனுமிவனே
செந்தமிழி னூலுரைக டந்ததிங் குரைசெயச் சேடனுன் முடிவதா
மோ
நீறுமுக முறுவித் தருங்கண்டி கைக்கலனி னேயமிகு வித்தெங்கணும்
நிகமாக மம்பூசை நிலைநிறீஇ விட்டதிவ னிமலப்ர சங்கநிதியே
சாறுதனு மாதத்தி னிற்பத்து வீறவருள் சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைங்தொழில் விலாசனே சந்த்ரபுரதலவாசனே.

திருத்தொண்ட ரைச்சிவ மெனக்கொண் டவன்சைவ சித்தாந்த சிகை
கண்டவன்
சிவகாம சுந்தரி சபாகடே சன்பாத சேர்த்திக ளெலாம்விண்டவன்
உருக்கொண்ட புண்ணியத் துயிரனுன் றன்பெய ரூருடியாக் கொண்ட
வுழவன்
உயர்தரத் தருமகல் லூரிபல் லூரினு மொழுங்குற நடாத்துத்தமன்
செருக்கொண்ட யேசுமத மேங்குபு நிடுக்கிடத் திறல்கொண்டடர்த்ததீரன்
திவ்வியசிவ பூசா துரந்தரன் சமயகுரு சென்மசை வத்துறவி நீத்
தருக்குண்ட தாப்படா டோபநா வலரல்லர் சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌலீசனே யைங்தொழில் விலாசனே சந்த்ரபுரதலவாசனே.

—ஈழமண்டல சதகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் குருபூசை

திரு சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

நாவலரின் 65-வது குருபூசைத் தினம் டிசம்பர்மாதம் 6-ந் உ. புதன்கிழமையாகும். அவர் குருபூசையை யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி முதலிய இடங்களிலுள்ள சைவ சபையினர் பிரசங்கம், மாகேசுர பூசை, தேவாரபாராயணம் முதலியன வாயிலாகக் கொண்டாடுவது வழக்கம். இங்ஙனம் செய்யப்படும் விழாக்கள் வெறும் ஆரவாரத்தோடு நின்றுவிடுகின்றனவேயன்றி இம்மியும் பயன் விளைத்ததாகக் காணப்படவில்லை.

நாவலர் ஏற்படுத்திய தருமதாபனங்கள் அவர் நோக்கத்தின்படி இப்போதுள்ள தரும பரிபாலகர்களால் நடாத்தப்படுகின்றனவோ என்பதைக் கவனித்து அவற்றைச் சீரிய நிலைக்குக் கொண்டுவர வேண்டிய வழிகளைத் தேடுவதே அப் பெரியாருக்கு வழிபாடாற்றியதாகும்.

சிதம்பரத்திலுள்ள நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் இஞ்ஞான்று சைவம் பிரகாசிக்கவில்லை. சில வருடங்களாகச் சைவ ஒளி அங்கே விளக்கமுறாமல் மங்கிக் கிடக்கிறன்து. சிதம்பரம் ஞானப்பிரகாசத் திருக்குளத்தினருகே நாவலர் கருத்தின்படி கட்டுவிக்கப்பட்ட சேக்கிழார்கோயில்இடிந்துவிழும் நிலைமையிலுள்ளது. பூசை முதலியன சரிவரநடத்தப் போதிய வருமானமில்லை. யாழ்ப்பாணத்துச் சைவர்களுக்குச் சிதம்பரத்தின்மீது மற்றைத் தலங்களினும் பார்க்கப் பற்றதிகமென்பது தமிழ்நாடறிந்ததே. இருந்தும் அவர்கள் நாவலர் தருமங்களிற் சிரத்தை யெடுக்காதது விசனிக்கத் தக்கதேயாம்.

நாவலர் தரும ஸ்தாபனங்களிலொன்றாய சென்னை வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்படும் நாவலர் பிரசுரங்களெல்லாம் புதுமுறையிற் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட வேண்டியது அவசியம். பல நூல்களுக்குப் பாட்டு முதற் குறிப்பகராதியில்லை. இக்குறையை நிவர்த்திக்க வேண்டும். கந்தபுராணம், கோயிற் புராணம் முதலியன சிறு எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளன; பாக்கள் அடி அடியாகப் பதிப்பிக்கப்படவில்லை; நான்கடியுள்ள செய்யுட்கள் இரண்டுவரியில் அடக்கப்பட்டுள்ளன; சீர் பிரிக்கப்படவில்லை; கந்தபுராணத்திற்குப் பாட்டு முதற் குறிப்பு அகராதியில்லை; இவற்றையெல்லாம் கவனியாது 60 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பதிப்பித்தபடியே இப்போதும் அச்சிட்டு வழங்குவது காலச் சக்கரத்தையொட்டியதன்று.

நாவலர் நோக்கத்தின்படி ஏற்படுத்தப்பட்ட சைவசபையின் மகாநாடு ஒவ்வொரு வருடமும் சைவப்பரீக்ஷை நடாத்திச் சித்திபெறும் மாணவர்களுக்குப் பரிசு வழங்குகின்றது. பரிசாக வழங்கப்படும் புத்தகங்கள் மிகுதியாகப் பிறரால் அச்சிடப்பட்டவை; நாவலர் பிரசுரங்களையும் அவர்கள் சரித்திரம், பிரபந்தத் திரட்டு முதலியவற்றையும் ஏன் பரிசாக அளிக்கக்கூடாது? இப்படிச் செய்தால் அவர்களைப் போற்றிய படியாகுமே! அவர்கள் தருமத்தையும் பரிபாலித்ததாகும்; சைவ பரிபாலன சபையாரும், கொழும்பு விவேகானந்த சபையாரும் இவ்விஷயத்தைக் கவனிப்பார்களென்றெண்ணுகிறேன்.

நாவலர் பெயரால் Ceylon University யில் ஓர் பரிசு ஆண்டுதோறும் அளிக்க ஏற்பாடு செய்தால் அவர்கள் பெயர் என்றும் அழியாமல் இருக்கும்; தமிழ்வசனநடையிற் கைவந்த B. A. வகுப்பு மாணவருக்கு அப்பரிசு உரியதாகும். சைவத்தைப்பற்றி ஓர் அரிய வியாசம் நல்ல தமிழ்நடையில் எழுதுபவருக்கு அப்பரிசு (Medal) வழங்கப்படல் வேண்டும். பரிசு பெற்றவரின் கட்டுரையைப் பின்னர் அச்சிட்டு வெளியிட வேண்டும்.

நாவலரிடத்தே எனக்குள்ள குருபக்தியின் பயனாக யான் சென்ற சித்திரை மாதத்தில் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல நேரிட்டது. அப்போது வண்ணார்பண்ணையிலுள்ள அவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் அவர்களோடு நெருங்கிப் பழகிய சில முதியோர்களையும் (பொன்னம்பலதேசிகர், தில்லையம்பலம்) மற்றும்பல சிவநேயச் செல்வர்களையும் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறலானேன். என் சிறுமையையும் கிடைத்த பேற்றையும் நோக்கும் போது,

"மேவரிய பெருந்தவம் யான் முன்பு
 விளைத்தன வென்னே
யாவதுமோர் பொருளல்லா வென்
 மனத்து மன்றிபே
நாவலர் காவலர் பெருது நதிகிழிய
 வழி நடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னி
 யிறு மலர்ந்தனவால்"
'செற்றார்தம் புரமெரித்த சிலையார்
 செல்வத்திருமருகன் பூண்டியினிற
 செல்லும் போதிற்
சுற்றநுஞ்சிலவேடர் கவர்ந்து கொண்ட
 தொருநிதியின் பரப்பெல்லாஞ்
 சுமந்து கொண்டு
முற்றத முலையுமையாள் பாகன் பூத
 முதற்கணமே யுடன் செல்ல
 முடியாப் பேறு
பெற்றார் தங்கழல் பரவ வடியேன்
 முன்னைப் பிறவியினிற் செய்த
 தவம் பெரியவாறே"

என்னும் பெரிய புராணத் திருவருட் பாக்கள் என்நினைவிற்கு வருகின்றன.

---

## 'நாவலர்' ஓர் சுகாதார மந்திரியுமாவர்

நிகழும் கார்த்திகைமீ உக-ங்உ புதன்கிழமை ஓர் அரிய திருநாளாகும். நமது அரிய தலைவர் — பெருந் தொண்டர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சிவபதம் அடைந்த தினம். இத்தினம் சைவ உலகத்திலும் தமிழ் உலகத்திலும் மிகப் பிரதானமாகக் கவனிக்கப்படவேண்டியது. அன்னிய மதத்தினின்றும் இற்றைக்கும் நம்மைக் காப்பாற்றிய பெரியார் நாவலர் அவர்களே. அவர் இறந்தும் இறவாது இருக்கிறார். அவரது இருதய ஞானம் பிரகாசிக்கின்றது. தமிழுலகத்துக்கு இவர் ஓர் 'சுகாதாரமந்திரியு'மாவர் இவருடைய பெயரைச் சொன்னாலே தொற்று நோய்கள் பறந்துவிடும். மிகத்திறமான சுகாதாரவிதிகளை நமக்கு வகுத்துத் தந்திருக்கின்றார். அந்த விதிகளை நம்மவர் அலட்சியம் செய்து விடுகிறார்கள். இது ஓர் துரோகம். இவரது பாலபாடங்கள் சுகாதார விதிகளையே விளக்குகின்றன. இவரது சுகாதாரவிதிகள் இந்தக் காலத்து அதிகாரிகளுடைய விதிகளைப் போல அல்ல. இந்தக் காலத்து அதிகாரிகளுக்குச் சுகாதாரக் குறைகள் என்ன என்ன என்று முறையிட வேண்டும். முறையிட்டாலும் பலன் அளிக்காது. ஆனால் நாவலர் அவர்களுக்கு அவ்விதமாக முறையிடத் தேவையில்லை அவருக்கே தெரியும் என்ன என்ன விதிகள் வேண்டும் என்பது.

இந்தச் சீமானைப் போல் நமக்கு இனிமேல் எந்த அதிகாரி வரப்போகின்றார். நாவலர் அவர்கள் இருந்தால், தற்காலப் பிராமணர்கள் என்ன செய்வார்கள்? கோயில்கள் என்ன செய்யும்? நித்திய கருமங்கள் எப்படி நடக்கும்-பூங்காவனத் திருவிழாக்கள் எப்படியிருக்கும்? தமிழிசை வளர்க்கும் ஆதீனங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கமாட்டாவா? சைவத்தைக் காப்பாற்றும் 'சைவ சேவாசதனங்கள்' இருக்க மாட்டாவா?

எங்களைக் காப்பாற்றிய தந்தை ஆறுமுக நாவலரைப்பற்றிச் சிந்திக்கக்கூடிய இந்த நேரத்தில் ஒவ்வொரு [illegible] வேண்டி[illegible] தரிசனம் செய்ய வேண்டும்; கள

# நாவலர் திருநாள்

திரு. ந. சண்முகரத்தினம்

ஆநா னில்லைப் புகலியர்
 கோனில்லை யப்பனில்லைச்
சீநரு மாணிக்க வாசக
 னில்லைத் திசையளந்த
பேநரு மாறு முகநா
 வலனில்லைப் பின்னிங்கியார்
நீநரும் வேணியன் மார்க்கத்தைப்
 போதிக்கும் நீர்மையரே.

—அ. சிவசம்புப்புலவன்.

தனிப்பண்பு படைத்த மனித வர்க்கத்தாரில் நற்குணமும் நற்சிந்தையும் உடையவர்கள் மிகச்சிலரினுஞ் சிலரே. இச்சிறுபான்மையரான புண்ணிய சீலர்களுள்ளும் மனித சமூகத்தின் முன்னேற்றத்துக்காகத்தொண்டுபுரிபவர்கள் அரிதினும் அரிது. தொண்டு செய்தலே போற்றத் தகுமெனினும் ஒருவர் பெயருக்கும் புகழுக்கும் நன்மை செய்வாராயின் அது உத்தமமாகாது. "தனக்கென வாளாப் பிறர்க்குரி யாளனாய்", தனது நலம், பொருள், வாழ்நாள் முழுமையும் மனித சமூகத்திற்கே அர்ப்பணஞ் செய்து, சேவை செய்பவரே உண்மைத் தொண்டர். நமது நாட்டுச் சரித்திரத்தை உற்று நோக்குவோமானால் நல்லூர் ஆறுமுகநாவலர் ஒருவரே நம்நாட்டில் வாழ்ந்த பெரியார்களுள் ஓர் உத்தம புருஷன் என்பது தெற்றெனப் புலப்படுகிறது.

நாவலர் பெருமான் தமக்குப் பிதிரார்ச்சிதமாகக் கிடைத்த பொருளை ஏற்று அனுபவியாமல், தமது கல்வித் திறமையினால் ஏற்படக் கூடிய உத்தியோகப் பதவிகளையெல்லாம் விடுத்து, சம்சார பந்தங்களி லகப்படாமற் துறவறம் பூண்டு, தம் வாழ்நாள் முழுவதையும் பக்தி மார்க்கத்திலும், சமூகசேவையிலும் கழித்தனர். பரமனைப் பக்தி பண்ணுவதும், அப்பரமனின் குழந்தைகளான மனிதர்களுக்கு உண்மைச் சேவை புரிவதும் ஒன்றே என்னும் உண்மையை அவர் கைக்கொண்டவர். அவர் பொதுவாகத் தமிழ்மக்களுக்கும், சிறப்பாகச் சைவர்களுக்கும் செய்த சேவை நலம் பலவாறு.

இவ்வுலகிற் புலவராய் வாழ்ந்த பெரியார் வரலாற்றை ஆராய்வோமானால் பெரும்பான்மையும் அவர்காலஞ்சென்ற பின்னரே அவர்தம் பெருமை வெளிப்படுகின்றது; காலம் செல்லச் செல்லப் பொங்கிப் பெருகுகிறது. கிரேக்க, ரோம, எகிப்திய சாம்ராஜ்யங்கள் தலை ஒங்கியிருந்த காலங்களில் மற்றவர்கள் அறியாமல் மறைவில் வாழ்ந்து மடிந்த தமிழ்ப் புலவர்கள் பலரை இன்று இலக்கிய ரசிகர்களும் சரித்திர ஆராய்ச்சியாளர்களும் பாராட்டுதலை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இன்னும் மேல்நாட்டில்எத்தனையோ பெரும் புலவர்கள் பிறந்த இடமும் இருந்தஇடமும் தெரியாமலிருக்கிறது. ஆனால் நம் நாவலர்பெருமானின் பெருமை அவர்தம்வாழ்நாட்களிலும் நாடெல்லாம் பரவியிருந்ததாயின், அவர் தமிழுக்கும் சைவத்திற்கும் அதனால் தமிழ் மக்களுக்கும் செய்ததொண்டின் சிறப்பு என்னே! இன்னும் தமிழ்ப் புலவர்கள் இல்லாதிருந்த காலத்தில் அவர் தோன்றியவரல்லர். தமிழ் நூல்கள்பல சிதைந்து கிடந்த காலமாயினும், தமிழ்ப் படிப்பே அதிகம் பரவாதிருந்த காலமாயினும், அவர்காலத்தில் தமிழ்மொழி வல்லுனர்கள் பலர் இருந்தனர். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார், யாழ்ப்பாணத்து சிவசம்புப்புலவர் முதலிய தமிழ்ப்புலவர்கள் வாழ்ந்த காலத்தில் தனிப்பெருந் தமிழ் வித்துவானாய் விளங்கினாரெனின் அவர்தம் புகழும் பேசவேண்டுமோ?

இன்னும் அறுபான்மும்மை அடியார்கள் கதையை அழகியதமிழில் பெரிய புராணமென்னும் நூலாகச் சேக்கிழார் சுவாமிகள் அமைத்து எமக்களித்துள்ளார். அப்பெரு நூலைத் தமிழ்மொழி சிறக்க, சைவம் வளர, இனிய தமிழில், எளிய நடையில், (சிந்தையை யுருக்கும் செவ்வியநடையில்) நவில் தொறும் நவில்தொறும் நயம் பெருகும் நூலாய், வசனமாக நாவலர் எழுதி அமைத்தார். சிவஞானமுனிவர் முதலியோர் முற்காலத்திற் செய்த வசனங்களின் இறுக்கமுமின்றி, தற்காலத்தில் மிதமாக எழுதப்படும் வசனங்களின் மயக்கமும் ஒழித்து திருந்திய செப்பமும், திறமையும் வாய்ந்து விளங்குகிறது ஆறுமுக நாவலரின் பெரிய புராண வசனம். இதைத் தவிர 'சிவனது பரத்துவம்' 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம்' முதலிய வேறு பல நூல்கள் அவர் எழுதியுள்ளார்.

வசனமெழுதுவதை விட நாவலர், காற்றும்நுழைய த இடங்களில் ஏட்டுப் பிரதிகளாகக் கிடந்த பல பழைய நூல்களை எழுத்துப்பிழைகள் சிறிதுமின்றி, அற்ப அறிவுடையோரும் சுலபமாய் வாசித்தறிதற்கு ஏதுவாய சொற்பிரிவுகளுடன் அச்சிடுவித்துள்ளார்.

இவ்வகையாக எமக்கு உபகாரஞ் செய்த பெரியாரின் ஞாபகத்தைப் பேணி வைப்பது எம்முடைய கடப்பாடு அல்லவா?

இன்னும் சென்ற நூற்றாண்டில் ஆங்கில அரசாட்சியின் கீழ் இலங்கை வந்ததும், முன்பு போர்த்துக்கேயக் கத்தோலிக்கப் பாதிரிமாரின் கொடுமையாலும், பின் ஒல்லாந்த அதிகாரத்தின் அனியாயத்தாலும் நம்நாட்டுச் சைவமக்கள் கஷ்டப்பட்டு வெகுகீழ்நிலையை அடைந்திருந்தனர். இப்படியாக முன்வினைப் பயனால் தம்நிலை தளர்ந்து, தேறுமுகங் காணாது யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் தயங்கிடும்போது நாவலர் பிறந்தார். கிறீஸ்தவப் பாதிரிமாரின் கொடிய கண்டனங்களுக்கும், அனியாயமான போதனைகளுக்கும் தகுந்த விடைபகர்ந்து சைவமக்களுக்குத் தமது பிரசங்கங்களால் சைவநீதியின் உண்மைகளை எடுத்தோதி, சைவ ஸ்தாபனங்களைப்பேணி, புதுஸ்தாபனங்களை நிறுவி எம்நாட்டில் சைவம் சிதையாமற் காத்து வைத்தவர் ஆறுமுக நாவலரல்லவா?

இத்தகைய பெரியாரின் சேவைநலத்தைப் பாராட்டி, அவரை நாம்சமயகுருவென்றே போற்றி, அவர்களுக்குக் குருபூசை செய்தலே மிகமிகச் சிறப்பு.

நாவலர்பெருமான் சாலிவாகன கஅ௦உ க்குச் சரியானபிரமாதிஞூகார்த்திகைமீ உகஉ, சுக்கிரவாரமும், மகநட்சத்திரமும் சத்தமி திதியுங்கூடிய புண்ணிய காலத்திலே, வண்ணார்பண்ணையிலே தாமிருந்த வீட்டில் சிவபதமடைந்தார். அவர் சிவபத மடைந்த தினம் இவ்வருஷம் கார்த்திகைமாதம் உகஉ புதன்கிழமை வருகிறது. அன்றையத்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள பல சைவ ஸ்தாபனங்களில் அவருடைய குருபூசையும், அவரைப்பற்றிய சொற்பொழிவுகளும் நடைபெறும். யாழ்ப்பாணத்திலுள்ள சைவர்கள் யாவரும் அவைகளிற் கலந்துகொள்வது அவர்களுடைய பெருங்கடனாகும்.

---

வெடுக்கக்கூடாது; பொய்சொல்லக் கூடாது; பிறர் பொருளில் ஆசைப் படக்கூடாது; தாய் தந்தை சொல் பெரியோர்சொல் தட்டக்கூடாது; புராணங்கள் படிக்க வேண்டும்; தேவாரம் படிக்கவேண்டும். கோயில்களில் சிவநாமம் படிக்கவேண்டும்; இன்னும் அப்பெரியார்கூறும் ஒழுக்கங்களைப் பின்பற்றவேண்டும். நாங்கள் நாவலருக்கு—அவரது இருதயத்துக்குச் செய்யக் கூடிய தொண்டு இவைகளேயாகும். இவர் சிவபதம் அடைந்த தினத்தில் நாடெங்கும்கொண்டாட்டங்கள்நடைபெறக் கடவுளைவணங்குகின்றோம்.

நீர்வேலி காரியதரிசி,
31244. சைவஇளைஞர் சங்கம்

---

## நன்கொடை

வண்ணார்பண்ணை, திரு. வை. ஆ. நடராசா அவர்களின் திதி, இந்தக் கார்த்திகை மாசம் 14 உ செய்யப்பட்ட போது, அவரது மகன் திரு. சண்முகரத்தினம், யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபைக்கு வித்தியாவிருத்தியை யுத்தேசித்து நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா 5 வரப்பெற்றும்.

மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலர் அவர்கள் வரலாறு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோம். அவர் வாழ்வின் அடிச் சுவடுகளைப் பின்பற்றியே இப்பேனுவும் செல்கிறது, பின்னே வாருங்கள்."

என்று பாரதியார் வாசகர்களை ஆர்வத்துடன் அழைத்துக் கொண்டு, பண்டைத் தமிழகத்தின் ஓர் பகுதியான கடல் கொண்ட குமரி கண்டத்தின் எல்லையைக் கூறி, அதில் ஓடிய பஃறுளியாற்றின் இடையே எடுத்த தீவாகிய இலங்கையைக் காட்டி, அது சிங்கவாகுவின் மகன் விஜயன் வருமுன்னரேயே நமது பழைய இதிகாசங்கள் கூறும். ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றென்பதையும், சிம்ஹளம் என்ற நாமம் கறுவாப்பட்டை மிகுதியாயிருந்தமையால் வந்த காரணப்பேர் என்பதையும், தருமபுத்திரர் செய்த அரச வேள்வியில் நவமணிக்காணிக்கை அளித்தவன் சிம்ஹளதீவு மன்னன் என்பதையும் விளக்கி, கார்த்திகேயன் படைவீடமைத்துக்கொண்டு சூரனைக் கொன்ற கதிர்காம ஸ்தலத்தில் வாசகர்களை வழிபடச்செய்து, அவர்கட்கு வள்ளி திருமணக் காட்சியை நினைவூட்டி, "முருகனை மாப்பிள்ளையாகக்கொண்ட இலங்கையின் பெருமைதான் என்னே!" என்றுரைத்துப் பெருமிதமூட்டி, இலங்கையின் நடுவே சிவலிங்கம் போல் எழுந்த சிவனொளிபாதத்தைத் தரிசிக்கச்செய்து, சம்பந்தர், சுந்தரர் பண்களாற் பரவிய திருக்கோணமலை, மாதோட்டம் இரண்டையுங் காட்டி, அறிவிற்கும் திருவிற்கும். புலமைக்கும் நாகரிகத்திற்கும் பெயர்போனதும், இலங்கையின் ஜோதி நிலையமுமான யாழ்ப்பாணத்தை யடைந்து, அதின் பல்வேறு பழம் பெருமைகளை எடுத்தெடுத்துக் கூறிய வண்ணமே நாவலர் பெருமான் அவதரித்த பழம்பதியான, தனித்தமிழ் நாகரிகப் பண்ணையான நல்லூரைச் சார்ந்து, அங்குக் கோயில்கொண்டிருக்கும் வடிவேலனையும் வள்ளி தெய்வானையையும் வணங்கச்செய்து, பின்னர் நாவலர் பிறந்த இல்லம் இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டி, அவரின் முன்னோர், கூடப் பிறந்தோர், கூடிப்படித்தோர், அவருக்குக் கல்வி கற்பித்தோர், அவரிடங் கல்வி பயின்றோர் முதலானவர்களின் வரலாற்றையெல்லாம் விரிவாகக் கேட்கச் செய்கின்றார். 'பூங்குயில்கள் எங்கும் பொழில் நல்லை' 'அன்னம் வழங்கும் அணிநல்லை' 'நன்னூற் கலைவிளங்கு நல்லூர்' என்றெல்லாம் சேனாதிராயரால் புகழப்பட்ட சிறப்புக்களுடன் 'சிவம் தழைக்க வாழுந் திருநல்லூர்' என்பதையுஞ் சேர்க்கும்படி கேட்கிறார் சுத்தானந்தர். [இவற்றோடு, சென்ற கந்தர் சஷ்டி வாரம் வெளிவந்த 'நல்லூர் முருகன் திருப்புகழ்' என்ற நூலில் முருகன் பக்தியிலும் இயற்புலமையிலும் சிறந்து விளங்கும், நவாலியூர் திரு. சோமசுந்தரப் புலவர் அவர்கள் "நாறுமலர் தாதாராறு பதமேறி நாதவிசைபாடும்—பொழில் சூழும், ஞானதவயோகர் சேரு நலையூரில்" எனப்புகழ்ந்து பாடியிருப்பதையும் இங்கு சேர்க்க விரும்புகின்றோம்.]

### கல்விக் கடல்

நாவலரின் கடல்போல விரிந்த கல்விப்பெருக்கை விளக்கும் அத்தியாயத்தில், சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:—

"புலமையில் இருவகையுண்டு. இயற்புலமை, செயற்புலமை, இயற்புலமை மூற்பிறவிகளில் கற்றறிந்த பயனாலும், அருளாலும், பிறவிக் குணத்தாலும், மரபாலும் வரும்; செயற்புலமை கற்றறிவினால் வரும், நாவலர் இயற்புலமையும் செயற்புலமையும் உடையார். இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றிலும் வல்லவர், ஒன்பது வயதிலேயே தந்தை எழுதிவிட்ட நாடகத்தை இவர் பாடிமுடித்தார். அவர் பிறரிடங் கற்றது சிறிது; தாமே கற்றதே மிகப்பெரிது, இருபத்துமூன்று வயதிற்குள் அவர் ஒரு மனிதன் அறியவேண்டிய கல்வி அறிவெல்லாம் முயன்றுபெற்றார். இவர் இவ்வளவு நூல்களை யாரிடம் கற்றார் என்று பலர் வியக்கும்படியிருந்தது அவரது கல்வி. ........அவர் பெண் ணின்பத்தைப் புண்ணென வெறுத்தார். பணத்தாசையைப் பாசமென ஒழித்தார். இசைவகைகளை இருவிகார மனத்தின் அலைகளென நீத்தார். இறைவனையே அவர் சரணமடைந்தார், சிவா, முருகா என்றே அவர்ஆவி கூவியது. இச் சாதனங்களால் அவர் உள்ளெழுச்சியும், மனஒருமையும், தெள்ளறிவும் பெற்றார். இதனால் ஒருதரம் கேட்டதும் படித்ததும் அவர் உள்ளத்தில் ஆழ்ந்தது. சேனாதிராயரைப் போலவே அவரும் ஏகசந்தக்ராகியானார். இத்தெளிந்த ஒருமையுள்ளமே அவரது பேரறிவின் இரகசியமாகும். இதனால் பிறர் பத்தாண்டு வருந்திக் கற்பதை இவர் ஓராண்டில் எளிதாகக் கற்றார். இவர் மற்றைப் புலவர்போலக் கற்றுக் கவிபாடி வாதிட்டுச் செல்லவில்லை. கல்வியறிவால் தமிழுக்கும் சைவருக்கும் காலநிலையைக் கருதிச் செய்யவேண்டிய பணி தமக்கு இருப்பதாக நாவலர் நினைத்தார். இதற்காகத் தம்மைத் தயார் செய்துகொள்ளவே அவர் உயர்ந்த இலக்கியங்களைப் பயின்றார். அவர் கல்வியின் இரண்டாவது இரகசியம் இதுவே. பார்ஸிவல் பாதிரிக்கு அவரைப் பண்டிதராக்கியதும் பரமன் செயலே. அதனாலேதான் அவர்கால நிலையையும், அதற்கேற்ற பணியையும், அதற்காகத் தம்மைத் தயாரித்துக் கொள்ளும் வகையையும் அறிந்தார்."

"........ந....மது அருள்நூல்களை அறியாமலே நம்மவரிற் பிறமதம் புகுந்து பாழாகிறார்கள் என்ற உணர்ச்சி பிறந்தது. பாதிரியாருடன் பழகப்பழக இவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதுபோல நாம் நமது சமயத்தைப் பரப்பவேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. ...பாதிரிமார் நமது சமயத்திலுள்ள குணதோஷங்களைச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குத் தகுந்தபடி பதில் சொல்லி அவர்கள் சமயத்தின் இயல்பையும் நமது சமயப் பெருமையையும் ஒப்பிட்டுச் சனங்களுக்குச்சைவ உணர்ச்சி பெருகும்படி சொல்லவேண்டும். நம்மவர் இனி உறங்கப்படாது கிறிஸ்தவப் பாதிரிமார்கள்போலக்கற்றறிந்த சைவப் பாதிரிகள் எழுந்து சமயப் பிரசாரம் செய்யவேண்டும். இன்றேல் இப்போதுள்ள சிறிது மத உணர்ச்சியும் போய்விடும். இதுதான் நாவலர் உள்ளத்தில் எழுந்த சைவ உணர்ச்சி. இவ்வுணர்ச்சிக் கொடியிற் பூத்துக் கனிந்த சிவகைங்கரியங்களே இனி இவரது வாழ்க்கையாகும்."

### தமிழ்ப்பணியும் சிவத்தொண்டும்

நாவலரின் அரிய செயல்களையும் அவரடைந்த பெரும் புகழையும் விபரிக்கும்அத்தியாயங்களில், அவரது ஆவேச மொழிகளும் வீரச் சொற்களும் இடையிடையே மிளிர்ந்து நூலுக்குப் புதுமையோடு சேர்ந்த ஓர் தனிப் புதுமையைக் கொடுக்கின்றன; அத்துடன் அவர் இயற்றிய நூல்கள், அவர் அச்சிட்டு வெளியாக்கிய இலக்கியங்கள், அவரது சொற்பொழிவுகள் பாடல்கள் கட்டுரைகளெல்லாம் இப்பாகத்தில் தக்க இடம் பெறுகின்றன. நாவலர் பாலபாடங்களே ஓர் தனி அத்தியாயமாகும் பாக்கியம் பெற்றுள்ளன. நாவலரின் சிவாகம கைங்கரியத்தை விளக்கும் பாகத்தில், சரஸ்வதி, யமுனை, கங்கை மூன்றுங் கலக்கும் திரிவேணிசங்கமம்போல், அவரின் கலை ஞானமும் நூலாசிரியரின் கலைஞானமும் அனுபவஞானமும் ஒன்றாய்க் கலந்து சுத்தாத்துவித சித்தாந்த விளக்கமாய் முடிவதைக் காண்கின்றோம். இதிலிருந்தும், யோகி சுத்தானந்தர் முன்னரேயே எழுதியுள்ள 'சிவஞானதீபம்' என்னும் நூலில், "வேதமும் ஆகமும் தந்தையும் தாயும், இலக்கணமும் இலக்கியமும், வேரும் கிளையும் போன்றன. வேதம் அறிவுநூல்; ஆகமம் அன்பும், அறிவும், இன்பமும் சேர்ந்த உண்மை அனுபவநூல். வேதம் 'நீ அது, அதுவாயிரு' என்ற அமைதியாகும். ஆகமம், சீவன் சிவமாகும் சாதனத்தைக் காட்டும்; சிவாய நமவென்று இறைவனை அன்பு செய்து, அவனருளால் சிவோஹம் பாவனை பெற்று, எங்கும் சிவமயம் காணும் சுத்த அத்வைத சித்தியைத் தரும்" எனக் கூறியிருப்பதி லிருந்தும் மெய்கண்டாரின் மதமே அடிகளின் சமயம் என்பது வெளியாகின்றது.

சிவப்பிரகாசருக்கும் சிவஞான யோகிகளுக்கும் பிறகு தெளிவான வசனநடையில் தக்க ஆதாரங்களுடன் சிவசமயத்தைத் தமிழ் வழங்கும் தேசமெல்லாம் பரப்பியவர் நாவலர் ஒருவரே. அவருக்குப் பிற் காலத்துக்கேற்ற எளிய இனிய தமிழ் நடையிலும் உலகமொழியாகிய ஆங்கிலத்திலும் அந்தச் சிவாகமத் தொண்டில் ஈடுபட்ட பெருமை இந்நூலாசிரியரைச் சேர்ந்ததாகும்.

### அருட்பா வழக்கு

முன்னுரையிலேயே, அருட்பா மருட்பா விவாதங் குறித்து அடிகள் தாம் சிறுபிள்ளையாயிருக்கும் போது தமது தமிழாசிரியர் வாக்காக, "எல்லாம் நல்லதிற்கே; நல்லூரார் பெயர் முழங்கத் தில்லையப்பன் செய்த கூத்தே; ஒருவர் பாடினார்: ஒருவர் பேசினார்; எழுதினார். இருவர் பெருமையையும் உலகறிய வேண்டியே அவன் விளம்பரஞ் செய்கிறான்" எனக் காட்டியுள்ளார். பின்னர் நூலின் ஐம்பத்தைந்தாம் அத்தியாயத்தில் அருட்பா மருட்பா விவாதத்தை அணுவேனும் பட்சபாதமின்றி விளக்குகிறார். அதில் நாவலரின் மறுப்புரைக் குறிப்புக்களை யெல்லாம் அந்தப்படியே தந்துள்ளார். "தேவார திருவாசகங்களைக் கைவிட்டு நேற்றெழுந்த ஒருவர் பாடலையே போற்றக்கூடாது. பழைய தமிழ்மறைக்குச் சேதம் வரும்படி எதுவுஞ் செய்யலாகாது என்பதே நாவலரின் எண்ணமாகும்" என்பதை வற்புறுத்தி, "வள்ளலார் பெயரை உலகுள்ளளவும் இருக்கச்செய்யும் சாகாவுடல் அருட்பாதான் என்போம். அதுபோல் நாவலரின் சாகாவுடலும் அவர் அருளிய நூல்களும், அவர் தூண்டிய சைவக்கனலு மென்போம்" எனச் சமாதானங்கூறி, "தேவார திருவாசகங்களான திருமறை நூல்களையும் அவற்றை அருளிய குருமார்களையும் வணக்கமுடன் போற்றி நாவலர் ஆவியை மகிழ்விப்போம்" என வேண்டி இந்தப் பாகத்தை ஆசிரியர் அன்புடனும் அழகுடனும் முடித்துள்ளார்.

### இறுவாய்

நாவலருக்கு யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் சென்னையிலும் சிலைநாட்டவேண்டும், அவர் படத்தைப் பெரிதாக வர்ணப்பொலிவுடன் அச்சிட்டு ஒவ்வொரு தமிழரும் வீட்டில் வாங்கி வைக்க வேண்டும். அதைக் காணும்போதெல்லாம் தமிழுக்கும் சமயத்திற்கும் அவ்வாறு தியாகத் துணிவுடன் உழைக்கும் எழுச்சி பெற வேண்டும், நாவலர் பாலபாடம் வசனநூல்கள்இவற்றை ஒவ்வொரு தமிழனும் படிக்கவேண்டும் என்பனபோன்ற பல கோரிக்கைகளுடனும், அவரைச் சுற்றிக் குவிந்து கிடக்கும் புகழ்மாலைகளிலிருந்து தெரிந்து எடுக்கப்பட்ட சில நறுமலர்ச்சிகளைச் சேர்த்துத் தொடுக்கப்பட்ட ஓர் அன்புமாலையுடனும் இந்த அரியநூல் முற்றுப்பெறுகின்றது. அவற்றுட் சில வருமாறு:-

செந்தமி ழுய்ய, சைவத் திருநெறி
விளங்க வந்தோன்!
அந்தமில் கல்வி கேள்வி யாழியைக்
கடந்து, நாளும்
தந்தனன் அமுத நூல்கள்; சாவிலா
வரத்தைப் பெற்ற
நந்தமி ழுள்ள மட்டு நாவலன்
வாழ்க மாதோ!

கல்வியின் வரம்பு கண்டோன்; கட
வுண்மாக் கலைக ளுக்கிங்
கெல்லையேயானேன், வான்போல்
இன்னுயி ருலகுக் கெல்லாம்
செல்வத்துட் செல்வமான சிவ
நெறிச் செல்வஞ் சேர்த்து
நல்கிய வள்ளலான நாவலன்
வாழ்க மாதோ!

அங்கையினெல்லி போலே யாகமப்
பொருளுணர்ந்தோன்
சங்கரன் அருமைச் செல்வி யாகிய
தமிழ ணங்கைத்
தங்கமாம் அரியணைமீ தேற்றியே
தமிழரான
நங்குல முய்யச் செய்த நாவலன்
வாழ்க மாதோ!

அருந்தமிழ்க் கலைமகள் கை
யாழெனும் யாழ்ப்பாணத்தின்
பெருந்தவப் பயனே, தென்னா
டிலகிடப் பிறக்குஞ் சைவ
விருந்தளிமணியே, யெங்கள் வீடோ
றும் விளக்கே போலப்
பொருந்தொளிர் முருகனன்பார்
நாவலன் பொலிக மாதோ!

அச்சத்தைத் துறந்தான்; உள்ளத்
தரனையே நினைந்தான் மூவர்
சொற்சுவை அணிந்தான் ஆன்றோர்
தொகுத்தநன் னூல்கள் வாழ
மெச்சுநற் பணிகள் செய்தான்;
வியன்றமிழ் வியாசனென்றெம்
உச்சிமேல் வைக்கத்தக்க நாவலன்
ஒளிர்க மாதோ!

தமிழினைப் புதுக்க வந்த தத்துவப்
புலவ னென்கோ!
தமிழ்ப்பணி தனை மணந்த தவ
மணிச் சைவ னென்கோ!
தமிழிசை பரவ வந்த தாரகக்
குழலே யென்கோ!
அமிழ்தினுமினிய சொல்லான்
அறுமுக நாவலோனே!

நற்றமிழ்க் குரிசிலான நாவலன்
வாழ்வைப் பாரீர்!
கற்றவன் புரிந்த செஞ்சொற் கனி
தமிழ்த் தொண்டைக் காணீர்!
பெற்றநந் தாயின் வீரப்பெருமையை
நிலைநிறுத்த
முற்றிய காதலோடு முத்தமிழ்
முழங்கச் செய்வீர்!

அருந்தமிழ்வாழ்க! நாளும் அறவினை
பெருகச் செய்யும்
பெருந்தகையாளர் வாழ்க! பிறங்குக
தவவொழுக்கம்
குருந்தடி வீற்றிருக்குங் குருமணி
யருளினாலே
திருந்தடி யார்கள் வாழ்க, சிவநெறி
தழைக்க மாதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாவலர் கொண்ட பேராசை'

"நான் ஜயஹு முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவஹு பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலகஹு புரட்டாதிமாசம் பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது' என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. [நான் இங்கிலிஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப்பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம்பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும் அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னிகை நாயகனிடத்து ஒருதுட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ்செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்வேண்டும் என்னும் பேராசையேயாம்.]

இப்பேராசையினால் இருபதுவருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச்சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்வார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப்போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வர்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

இதனை நான் என் சிறுவயசு முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து, 'சைவசமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவசமயவிருத்தியின் கண்ணதாகிய பேராசையை, அதனை முடித்தற்குச் சிறிதும் சத்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சத்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே!' என்று இரவும் பகலும் பெருங் கவலைகொண்டு பெருமூச்செறிதலினும் பலருக்குப் பிதற்றுதலினுமே பெரும்பான்மையும் என்காலத்தைப் போக்குவேனாயினேன்.

நான் எனக்கு ஒழிவுள்ளகாலத்தைக் கைம்மாறு வேண்டாது உலகத்தாருக்குப் பயன்படக் கழித்தல்வேண்டும் என்று நினைந்து, விசுவாவசுஹு தைமாசம் முதலாகச் சில பிள்ளைகளுக்கு இராத்திரியிலும் காலையிலும் தமிழ்க்கல்வி கற்பித்துக்கொண்டு வந்தேன்.

# நாவலரைப் பாராட்டல்

திருவாவடுதுறையாதீன மகாவித்துவான்

**ஸ்ரீமத் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடியவை**

தரவு கொச்சகக் கலிப்பா

அகத்தியந்தொல் காப்பியமுன்
 னுயபல விலக்கணமுஞ்
சகத்தியல்பல் லிலக்கியமுஞ்
 சாற்றுபர மதநூலும்
மகத்துவமெய்ப் பொருணூலும்
 மதியமையப் பயின்றுணர்ந்து
சகத்தியலு மனுபூதித் தோன்றலா
 யமர்பெரியோன்.

மாறுபடு பரசமய வழியனைத்து
 மறமாற்றி
யாறுபடு சேஞ்சடிலத் தண்ணலா
 ருணேறியே
தேறுபடும் படிவளர்த்துத்
 திகழுமா தவமுடையோன்
வீறுபடு சிவனடியார் மேன்மை
 முழு மையுமுணர்ந்தோன்.

கருள்விரவு தலைக்கழிக்குங்
 கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவு மைந்தெழுத்தும்
 பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள்விரவு சுத்தசைவ
 சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள்விரவு பரவுபுக ழாறுமுக
 நாவலனே.

---

மகாமகோபாத்தியாயர்

டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள்

..."தமிழ்நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப்பினும் நாவலரென்று கூறிய மாத்திரத்தில் அச்சொல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரையே குறிக்கும்; இதற்குக் காரணம் அவர் நாவலர்களுக்குள் சிறந்தவராக விளங்கியமையேயாகும்."...

..."நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும்பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என்கடன் பணிசெய்து கிடப்பதே," என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் யாழ்ப்பாணத்திலமைத்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்."

..."என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவலருடைய குணாதிசயங்களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது தமிழ் நாட்டினருக்குத் தமிழினிடத்தில் அன்பு வளர்ச்சி பெற்று வருகின்றது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் ஒரு காரணம் ஆவர். அவர் என்றும் தமிழ் நாட்டினரது நினைவில் இருப்பவராதலின் அவருடைய புகழுடம்பு என்றும் மறைதலின்றி நிலவி ஒளிருமென்பதில் ஐயம் இல்லை."

---

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்

**திரு. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் B. A. B. L.**

"ஸ்ரீ நாவலர் பெருமான் தமிழ் மக்களால் எக்காலத்தும் போற்றற்குரிய பெரியோர்களிலொருவர். பெருங் கல்வியாளர். சைவசமயத்தின் பொருட்டும் தமிழன்னையின் பொருட்டும் தம்மை அர்ப்பணஞ் செய்த பெருந்தகையாளர். 'தமக்கென வாழாதவர்' என இவரைக் கூறுதல் பெரிதும் ஏற்புடைத்தாகும். தமக்கென்று பொருள் முதலியவற்றை விரும்பியவரல்லர். தாம் தேடியன முழுவதையும் தமது பெருநோக்கங்கள் ஈடேறுவதற்கே பயன் படுத்தியவர்.

சைவசமயமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமென்பதே இவரது பெருநோக்கம். இதன் பொருட்டுத் தம் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது உழைத்துவந்தார்கள். பிற சமயத்தார்களோடு சொற்போர் ஒருபால் நிகழ்த்தி வந்தார்கள். ஒருபால் சமய சாஸ்திர பரிசிலனை செய்து வந்தார்கள். ஒருபால் தமிழிலக்கிய விலக்கணங்களைப் பரிசோதித்து வெளியிட்டு வந்தார்கள். ஒருபால் போதகாசிரியராயிருந்து சமய நூல்களையும் தமிழ் நூல்களையும் மாணவர்களுக்கு ஆர்வம் பிறக்கக் கற்பித்து வந்தார்கள். தமது நோக்கம் இனிது நிறைவேறுதற் பொருட்டுக் கலாசாலைகளை நிறுவினார்கள். தமது இறுதிக் காலத்திலே தமிழ்ப் பல்கலைக் கழகமொன்று நிறுவுதற்குப் பெரிதும் முயன்று வந்தார்கள்.

இங்ஙனமாகத் தமிழ்மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல் பொருளாவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்த பெரியாரை நாம் அடிக்கடி ஞாபகத்தில் வைத்துப் போற்றுதல் நமது முதற் கடமையாகும்.

—நாவலரின் நினைவுமலர்

---

தமிழ் ஆசிரியர்களிலே சென்ற நூற்றுண்டிலே, சைவசித்தாந்தத்திற்கு மறு உயிர் கொடுத்தவர், திரு. ஆறுமுகநாவலராவார் யாழ்ப்பாணத்திலிருந்துசென்னைக்குவந்து அச்சுக்கூடம்வைத் துசைவ நூற்கள் வெளியிட்டும், சொற்பொழிவுகள் ஆற்றியும் சைவசித்தாந்தத்தை வளர்த்தார்; தமிழுக்கும் புத்துயிர் தந்தார்,"

—கீ. நாராயணசாமி முதலியார்.

---

"ஆறுமுக நாவலர் அவர்கள் கண்ணோட்டமின்றி மாயாவாத முதலிய பரசமயங் கடிந்து சைவசமயத்தை நிறுத்திப் புகழ் படைத்தார்கள்."

—சபாபதி நாவலர்

---

"யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர், இடையிருட் கடைக்காலத்தில் விடியு முன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோலத் தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழும் தழைய அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவர்...."

"...இனிய உரைநடையில் தமிழ்க் கட்டுரைகளெழுதும் புலமை நலன் தொல்காப்பியரால் பண்டைத் தமிழுலகில் நிலவியதெனக் குறிக்கப்படுவதல்லால், அறவே ஆட்சியற்றிருந்த தமிழகத்தில் அத்துறையை, உவப்பும், வியப்பும், ஒருங்குதவ, தமிழுக்கும் தமிழருக்கும் பரந்த பயன்விளைய, நாவலரவர்கள் தாமே வழிகாட்டியாயும் தீர்க்கதரிசியாயும் தொடக்கித் தமிழுரைநடைக்கு இறவாப் பெருவாழ்வு நல்கினார்கள்...."

—அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M. A. B. L.

## நாவலர் எழுத்தின் வன்மை

"யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகளே! உங்களிடத்துள்ள அன்பு மிகுதியினாலே நாஞ்சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னை! விபூதி ருத்திராக்ஷதாரணம், பஞ்சாட்சரசெபம், சிவாலய தரிசனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை! அந்தியேட்டி சிராத்த முதலியவைகளைச் செய்தும் என்னை! வருஷந்தோறும் கந்தபுராணங் கேட்டும் என்னை! சிதம்பராலய தருமத்தின் பொருட்டு அளவுகடந்த ஆஸ்திகளைக் கொடுத்தும் என்னை! வருஷத்துக்கு இரண்டுதாஞ் சிதம்பர யாத்திரை செய்தும் என்னை! சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தும் என்னை! ஊர்தோறுங் கோயில் கட்டுவித்துப் பூசை திருவிழாக்கள் செய்வித்தும் என்னை! சிவராத்திரி கந்தசட்டி கார்த்திகை சுக்கிரவார முதலிய விரதங்களினாலும் அங்கப் பிரதக்ஷிணத்தினாலும் உடம்பை வருத்தியும் என்னை! நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமையையும், அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவபத்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேதபாராயணம தேவார திருவாசக பாராயணம் சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கின்றீர்களில்லை. காமம் கோபம் சண்டை உயிர்க்கொலை முதலிய பெருந் தீமைகளை வளர்த்தற்கு ஏதுவாகிய பொதுப் பெண்களுடைய நடன சங்கீதம் வாணவிளையாட்டு முதலிய துர்க்கருமங்களிலே உங்கள் பெரும்பொருளைப் பெருமகிழ்ச்சியோடு செலவு செய்கின்றீர்கள். உங்கள் கோயிற் கோபுரங்களிலுந் தேர்களிலும் பார்க்கத்தகாத நிருவாணப் பிரதிமைகளைச் செய்விக்கின்றீர்கள். உங்கள் கோயிற் பந்தர்களிலே நிருவாணமாயும் காமவளர்ச்சிக்கு ஏதுவாயும் உள்ள சித்திரங்கள் எழுதப்பட்ட காகிதங்களை ஒட்டுவிக்கிறீர்கள், கோயிற் சுவர்களிலே அப்படிப்பட்ட சித்திரங்களை எழுதுவிக்கிறீர்கள். கேட்கத்தகாத சிற்றின்பப் பாட்டுக்களைப் படிப்பிக்கின்றீர்கள். இதுபற்றி விளையும் பெருங்கேடுகளையும், இதுபற்றி அன்னிய தேசத்தாராலும் அன்னிய சமயத்தாராலும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லைகடந்த அவமதிப்பையும், இன்னும் நீங்கள் எட்டுணையேனுஞ் சிந்திக்கின்றீர்களில்லை. நீங்கள் பாதிரிமாரும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களுஞ் செய்யும் பெருங் கொடுஞ் சிவதூஷணங்களை அஞ்சாது கேட்கின்றீர்கள். பாதிரிமார்கள் உங்களை வஞ்சிக்கும்படி உங்கள் வீடுகளுக்கு அனுப்புகிற பெண்களுடைய மையல் வலையில் நீங்கள் அகப்பட்டு, அவர்கள் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேட்டு அவர்களுக்கு உங்கள் பொருளை வாரி வாரி இறைக்கின்றீர்கள். உங்கள் கைப்பொருளையே இறுத்து உங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி அளித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்களைப் படிக்கவுஞ் சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையும் இழக்கவும் பண்ணுகிறீர்கள். நீங்கள் இப்படிச் செய்வீர்களாயின், நீங்கள் செய்பவைகளென மேற்சொல்லப்பட்ட சிவ புண்ணியங்களினால் யாதொரு பயனும் உண்டாகாதே! பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் இருஷிகளும் தாங்கள் சிவபூசை சிவதரிசன முதலிய சிவபுண்ணியங்களை நியமமாகச் செய்பவர்களாய் இருந்தும், தக்கன் யாகத்தில் அவன்செய்த சிவதூஷணங்களைக் கேட்டுக்கொண்டிருந்த பாவத்தினாலே அநுபவித்த பெருங் கொடுந் துன்பங்களெல்லாம், நீங்கள் வருஷந்தோறும் பொருள் செலவிட்டுக் கேட்குங் கந்தபுராணத்தினாலே நன்றாக அறிந்திருக்கின்றீர்களே. நாஞ் சொல்லவேண்டுவதென்னை! —யாழ்ப்பாணச் சமயநிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் எல்லாச் சமயங்களையுந் தழுவியது; அன்பு மயமானது

(சூசாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

சைவத்தை நன்காராய்ந்த மேலைத்தேச அறிஞர்களாகிய போப், குட்வில், கௌடி, பிரேசர் முதலியவர்கள் அதன் சமரசத்தை ஒப்புக்கொண்டுள்ளார். அதனுடைய நியமங்களும் அனுஷ்டானங்களும் மனிதனுடைய அறிவையும் தெய்வசக்தியையும் மென்மேலும் வளரச்செய்வதாம். அச்சமயத்திற்குள்ள சித்தாந்தம், சமரசம் சாரம், சன்மார்க்கம், முத்திநெறி என்னும் பெயர்களே அதன்மேன்மையை விளக்குவனவாம். உண்மைச் சமயத்தின் இலக்கணத்தை ஓர் பெரியார் பின்வருஞ் செய்யுளாற் கூறுகின்றனர்.

ஓதுசமயங்கள் பொருளுணரு
நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வா மலுள
பலவு மிவற்றுள்
யாது சமயம் பொருணூல் யாதிங்
கென்னின்
இதுவாகு மதுவல்ல வெனும்
பிணக்கதின்றி
நீதியினுனிவை யெல்லா
மோரிடத்தே காண
நின்றதியாதொரு சமயமது சமயம்
பொருணூல்
ஆதலினுமிவை யெல்லா மருமறை
யாகமத்தே
அடங்கியிடு மவையிரண்டு மரனடிக்
கீழடங்கும்''

இவ் விலக்கணத்தைக் கொண்டது நமது சைவமேயாம்.

சைவக் கொள்கைகளை அறியாத சில மேலைத்தேச அறிஞர்கள் (மாக்ஸ் முல்லர், மானியர் வில்லியம்ஸ், மாக்டொன்னல் முதலியன) பகவத்கீதை, சுவேதாசுவதர உபநிடதம் முதலியவற்றைக் கூறும்போது, துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சாங்கியம் யோகம் ஆகிய இவற்றிலொன்றையேனும் அனுசரியாததும் ஆனால் இவற்றிற்கெல்லாம் பொதுவான கொள்கைகளையுடையதுமாகிய ஓர் சமரச சமயம் இருந்திருக்கவேண்டுமென்று கூறுகின்றனர். அவர்கள் குறிப்பித்த சமரச சமயம் சைவ சித்தாந்தமேயாம்.

சைவத்தின் முத்திநிலையை அத்வைதம் என்னும் சொல்லாற் கூறுப. இச்சொல்லின் வழக்கப் பொருளாவது:- ஏகம், அபேதம் அபின்னம். இச் சொல்லுக்குச் சைவர்கள் கொண்டபொருள்:— அனன்யம், அந்நிய நாஸ்தி மணிலால் துவிவேதி என்பவர் தாம்எழுதிய ''அத்வைதம்'' என்னும் நூலில் வாதராயணர் எழுதிய உபநிடதார்த்தத்தின்படி அச்சொல்லிற்கு அனன்னியமென்றே பொருள் கூறுதல் சரியென்றும் ஏகம், அபேதம், அபின்னம் என்று பொருள் கொள்ளுவது தவறென்றும் விளக்கிக் காட்டியுள்ளார். ஒரு சிறு உதாரணத்தால் இதனை விளக்குவாம்.

உயிரெழுத்துக்கள் தாமே ஒலிக்கும்மெய்யெழுத்துக்கள்உயிரெழுத்தின் உதவியின்றி ஒலிக்கா. உயிரெழுத்தின்றி மெய்யெழுத்தின் ஒலி கிளம்பாது. மெய் இருந்தும் இல்லாதிருந்தும் ஒன்றே. இப்படியிருந்தும் உயிர் மெய்யாகாது; மெய் உயிராகாது. இவைகளின் உற்பத்தித் தொடர்பை நிர்ணயிக்க முடியாது, இஃதேபோல் கடவுள் பிரபஞ்சமாகார். பிரபஞ்சமும் கடவுளாகமாட்டாது. ஆனால் கடவுளின்றி பிரபஞ்சம் இயங்காது. இதுவே அனன்ய சம்பந்தமாகும். கடவுளின் முழுமுதற்றன்மையும் அளவிலாற்றலுடைமையும் பங்கமுறுயல் காப்பாற்றப்படுவதோடு பிரபஞ்சம் பொய்யானது எல்லாம் வெறுந்தோற்றம் என்றும் வாதம் நிராகரிக்கப்படுகின்றது பொன்னைப் பொன்னென்று கூறுவதில் ஓர் நூதனமுமில்லை செம்பு பொன்னாகக் கூடியதென்பதே சித்தாந்தக்கொள்கை, இக்கொள்கையின்படி உயிர் இறைவனன்று ஆனால் உயிர் கடவுளைப்போல் அல்லது கடவுட்டன்மையை அடையலாமென்பதாம் செம்புபோன்ற மட்டமான லோகம் பொன்னாக மாறுவது சித்திகளில் ஒன்றன்றோ, சைவசமயம் அன்பு சமயமெனப்படும்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப
ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலார்
அன்பே சிவமாவதாருமறிந்த பின்
அன்பே சிவ மாயமர்ந் திருந்தாரே.

என்னுந் திருமந்திரமும்,

''அம்மையே யப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே''

என்னுந் திருவாசக அடியும் சிவமே அன்பென்பதை வலியுறுத்தும். ஒருநாமம் ஒருருவமில்லாத கடவுளுக்கு அவர் தன்மையை விளக்குவதற்கு ஆயிரக் கணக்கான பெயர்கள் இருந்தபோதிலும் சிவனென்னுந் தூயநாமமே யாம் அவரைப்பற்றி அறிந்துகொள்ளக் கூடிய மேலான அனுபவத்தைக் குறிப்பிப்பதாம் அவருடைய அளவிலாற்றலுடைமை, சர்வ வியாபகத் தன்மை, எல்லாமறிதற்றன்மை முதலிய குணங்களால் நமக்கு ஒன்றும் புலப்படுவதில்லை அன்புச்சமுத்திரம் அல்லது ஆனந்த சாகரமாகவே யாம் அவரை உணர்ச்சி மூலமாகவே அறிகின்றோம், நாம் நற்காரியஞ்செய்து சந்தோஷப்படும்போது அச்சந்தோஷத்தில் இறைவனைக் காண்கின்றோம். இதனாலன்றோ எல்லோருக்கும் நல்லது செய்து பட்சமாக இருப்பதே சிவ பூசையாகக் கருதப்படும்.

## நாவலர் திருநாள் நீர்வேலி

ஷை விழா நிகழும் தாரண வருடம் கார்த்திகை மாதம் 21-ந் திகதி (6-12-44) புதன்கிழமை மாலை 7 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சைவ இளைஞர் சங்க ஆதரவில் நடைபெறும். அத்தருணம் வலி-கிழக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசபிள்ளை அவர்கள் தலைமை வகிப்பார்கள். ஆசிரியர் P. தம்பையாவும், திரு. கு சிற்சபேசன் அவர்களும் ஆறுமுகநாவலரைப் பற்றிப் பேசுவார்களென்றும் அறிகிறோம். —கடிதம்

## காரைநகர் வியாவில் சைவபரிபாலன வித்தியாலயம்

நிகழும் தாரணஹு கார்த்திகைமீ 23ௗ (8-12-44) வெள்ளிக்கிழமை மாலை ஆறுமணி தொடக்கம் வருடாந்தக் கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும் வித்தியாசாலைத் திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாதிபதி திரு. H. S. பெரேரு M.A. அவர்கள் தலைமை வகிப்பார்கள். வடமாகாண அதிபர் திரு. சி. குமாரசுவாமி C. C. S. அவர்கள் உணவுப்பொருள் விருத்தி என்னும் விஷயத்திலும் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. வீ. வீரசிங்கம் B. A. அவர்கள் கல்வி விருத்தியில் அரசினர் கடமை என்னும் விஷயத்திலும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. நவரத்தினம் M. A. அவர்கள் கல்வி விருத்தியில் ஆசிரியர் கடமை என்னும் விஷயத்திலும் உபந்நியாசஞ் செய்வார்களென அறிகின்றோம். —கடிதம்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### செவ் டிசம் 5

காலை: 7.45 ஸ்ரீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இருகுரலிசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.30 எ டி சுல்தான் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 செங்கோட்டை வி காசி ஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 கல்விஒலிபரப்பு 2-30 முடிவு

மாலை: 5 எ டி சுல்தான் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 செங்கோட்டை வி காசி ஐயர் புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் பேச்சு 7.30 அறிவிப்புகள் 7-35 நிகழ்கானம் 7.45 தமிழில் செய்திகள் 8 மகாராஜ உள்ளபடி 9 மாலினி நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 கோபாலகிருஷ்ணபாரதி பாடல்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

### புதன் டிசம் 6

காலை 7-45 ஸ்ரீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷடி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஏ வி திரிபுரசுந்தரி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ வி திரிபுரசுந்தரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருவாலங்காடு என் சுந்தரேசய்யர் வயலின் 5-40 இசைப் பயிற்சி 6 டி என் ராஜரத்னம்பிள்ளை நாகஸ்வரம்! 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40கிராம நிகழ்ச்சிகள் 7-15 ஆச்சுக்குரல் 7-30 அறிவிப்புகள் 7-35 டாக்கி மெட்டுகள 7-45 தமிழில் செய்திகள் 8 சினிமாபாட்டுகள் † 8 15 நமது தபால் பெட்டி 8 30 திருவாலங்காடு என் சுந்தரேசய்யர் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள்9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பர்மா போர்முனையில் 10-0 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் டிசம் 7

காலை: 7-45 ஸ்ரீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டி கே பட்டம்மாள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி கே நடராச பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 மதுரை ஏ சுந்தரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி கே நடராச பாகவதர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 மதுரை ஏ சுந்தரம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள்7-15 ஜப்பானிய கொடுமை 7-30 அறிவிப்புகள் 7-35 வானொலி வாத்யகோஷ்டி 7-45 தமிழில் செய்திகள் 8 மதுக்கிண்ணம் இசைசித்திரம் 8-15 மன்னார்குடி கே சாவித்திரி அம்மாள் கோட்டுவாத்யம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 யுகோஸ்லாவிய வீரம் 10 இசை வேளை † 10-30 முடிவு.

## கொழும்பு விவேகானந்த சபை

நிகழும் கார்த்திகைமாசம் 21உ (6-12-44) புதன்கிழமை மாலை 6 மணிக்கு மேட்டுத்தெருவிலுள்ள விவேகானந்தசபை மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் குருபூசை நடைபெறும். அன்றைய நிகழ்ச்சிகள் பூசை, தோத்திர பாராயணம், சொற்பொழிவுகள் முதலியனவாம். திரு. சே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் C C S கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். நாவலர்பெருமான் வாழ்க்கையையும் சேவையையும் குறித்து திருவாளர்கள் சி. முருகேசு அவர்கள் க. இராமச்சந்திரனவர்கள், செ. சின்னத்தம்பி அவர்கள், சி. நடராஜசங்கர பண்டிதரவர்கள் அதிபர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். திரு. ம. நடராசரத்தினமவர்கள் தோத்திர பாராயணம் செய்வார்கள். கடித.

## நன்கொடை

கண்டியிலுள்ள ''ஓர் அடியவன்'' தமது பிதாவின் ஆட்டைத்திதியை முன்னிட்டு இந்துசாதனப் பத்திரிகைக்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்.

மனேஜர்.

## இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 6 50 | 6 50 | 10 50 |

இந்தியா இலங்கை தபால்மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ். |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 9 50 | 9 50 | 13 50 |


## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் ''சாந்தன் றக்ஷா''

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின் ''சாந்தன் றக்ஷா'' கர்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கர்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, கர்ப்பக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கர்ப்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கர்ப்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் அன்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: சிற்றிடிஸ் பென்ஸறி

பெரூர் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietorss the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 4, December, 1944,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org